/பதிவஞ்சல்/ஒப்புகையுடன்/

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி)
செயல்முறைகள்,

ந.க.எண்.038209/இ2/இ1/2023, நாள் 19.03.2024

********

பொருள் : கருணை அடிப்படையில் பணி நியமனம் – விழுப்புரம் மாவட்டம், வளவனூர், அரசு மேல்நிலைப்பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர் – திரு.இல.சிதம்பரம் –15.11.2014-ல் இறப்பு – மகன் திரு.C.T.வெங்கடரமணன் – இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசால் வெளியிடப்பட்ட ஆணை அசல் அனுப்புதல் – சார்ந்து.

பார்வை:
1. விழுப்புரம், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.4454/அ3/2021, நாள் 12.10.2022.
2. விழுப்புரம் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் ந.க.எண்.4454/அ3/2021, நாள் 23.06.2023.
3. அரசாணை (நிலை) எண்.144, பள்ளி கல்வி [ப.க.7(1)] துறை நாள் 30.10.2023.
4. அரசுக் கடித எண்.11391/ப.க7(1)/2023, நாள் 03.11.2023

-----

முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம் ★ விழுப்புரம் மாவட்டம்
15 APR 2024

விழுப்புரம் மாவட்டம், வளவனூர், அரசு மேல்நிலைப் பள்ளி தொழிற்கல்வி ஆசிரியராக பணிபுரிந்தபோது 15.11.2014-ல் காலமான திரு.இல.சிதம்பரம் என்பவரின் வாரிசுதாரரான மகன் திரு.C.T.வெங்கடரமணன் என்பவருக்கு பார்வை 1-ல் கண்டவாறு விழுப்புரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரால் கருணை அடிப்படையில் பெரியதச்சூர், அரசு மேல்நிலைப்பள்ளியில், இளநிலை உதவியாளராக பணி நியமன ஆணை வழங்கப்பட்டு, அன்னார் பணியில் சேர்ந்த நாளான 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து பார்வை 3-ல் கண்டவாறு அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு பணிவரன்முறை செய்து வெளியிடப்பட்டுள்ள அசல் ஆணை மற்றும் கீழ்கண்ட அசல் ஆணைகள் மற்றும் பணிப்பதிவேடு ஆகியவை இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அவற்றினை பெற்றுக் கொண்டமைக்கான

ஒப்புதலினை மறு அஞ்சலில் அனுப்புமாறு விழுப்புரம் மாவட்ட முதன்மை கல்வி அலுவலருக்கு தெரிவிக்கலாகிறது.

மேலும், மேற்கண்ட பணிவரன்முறை ஆணை குறித்து தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொண்டிட தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு:

1. பணிவரன்முறை செய்து அரசால் வெளியிடப்பட்ட அசல் ஆணை-2
2. மனுதாரருக்கு கருணை அடிப்படையில் முதன்முதலில் பணிவாய்ப்பு கோரிய விண்ணப்பம் அசல்.
3. மனுதாரர் கருணை அடிப்படையில் முதன்முதலில் பணிவாய்ப்பு கோரிய விண்ணப்பம் அசல்.
4. 17-கலம் கொண்ட படிவம் அசல்.
5. இறப்பு சான்று அசல்-1
6. வாரிசு சான்று அசல்-1
7. 10ம் வகுப்பு மதிப்பெண் பட்டியலின் உண்மைத் தன்மை குறித்த அறிக்கை அசல்-1.
8. காலகெடு சான்று அசல்
9. இறந்த அரசு ஊழியரின் பணிப்பதிவேட்டின் முதல் பக்க நகல்.
10. இறந்த அரசு ஊழியர் பணியினை பணிவரன்முறை செய்ததமைக்கான பதிவுகள் கொண்ட பணிப்பதிவேட்டின் முதல் பக்க நகல்.
11. பணிநியமன ஆணை அசல்.
12. தனியரது பணிப்பதிவேட்டின் முதல் பக்க நகல்.
13. தனியர் பணியில் சேர்ந்த பதிவுகள் கொண்ட பணிப்பதிவேட்டின் பக்க நகல்.
14. ஒருங்கிணைந்த சான்று அசல்-1
15. ஆட்சேபணையின்மை கடிதம் அசல்-2
16. அரசாணை எண்.29ன் படியான உறுதி மொழி படிவம் அசல்-1
17. தமிழ்நாட்டில் எங்கும் பணிபுரிய உறுதி மொழி படிவம் அசல்-1
18. 10ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் அசல்-1
S.No.MAT0379162 / Reg.No.872386/ MAR 2010
19. தனியரின் பணிப்பதிவேடு அசல் – I தொகுதி

22/3/24

இணை இயக்குநர்
(பணியாளர் தொகுதி)

22/3/2024

பெறுநர் : முதன்மைக் கல்வி அலுவலர்,
விழுப்புரம் மாவட்டம். (பெயரிட்ட உறையில்)

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – பள்ளிக் கல்வி – கருணை அடிப்படை பணி நியமனம் – பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் (லேட்) திரு.இல.சிதம்பரம் என்பவரின் மகன் திரு.CT.லெட்சுமணன், இளநிலை உதவியாளராக பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வித்[ப.க.7(1)] துறை

அரசாணை (1ப) எண்.144

நாள்:30.10.2023
திருவள்ளுவர் ஆண்டு–2054
சோபகிருது, ஐப்பசி–13.

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை(நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் ந.க.எண். 038209/ஜே/இ1/2023, நாள் 25.08.2023.

********

ஆணை:–

விழுப்புரம் மாவட்டம், வளவனூர், அரசு மேல்நிலைப் பள்ளியில், தொழிற்கல்வி ஆசிரியராகப் பணிபுரியும் போது திரு.இல.சிதம்பரம் என்பார், பணிக்காலத்தில் 15.11.2014 அன்று காலமானார் என்றும், அவரது வாரிசுதாரரான, அன்னாரது மகன் திரு.CT.லெட்சுமணன் என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு 13.07.2016 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 15.11.1994 என்றும், அவர் இடைநிலைக் கல்வி (எஸ்.எஸ்.எல்.சி) பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், இவருக்குப் பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, திரு.CT.லெட்சுமணன் என்பவர் இளநிலை உதவியாளராக 14.10.2022 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக்கல்வித் துறையில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார் என்றும், எனவே, அன்னாரின்

த.பி.பா./–

பணியினை வரன்முறை செய்யுமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக்கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பள்ளிக்கல்வி இயக்குநரின் பரிந்துரையை, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசு நன்கு ஆய்வு செய்து, விழுப்புரம் மாவட்டம், வளவனூர், அரசு மேல்நிலைப் பள்ளியில் தொழிற்கல்வி ஆசிரியராகப் பணிபுரியும்போது பணிக்காலத்தில் பணியிடைக் காலமான திரு.இல.சிதம்பரம் என்பவரின் வாரிசான அவரது மகன் திரு.CT.லெட்சுமணன் என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக்கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் 14.10.2022 முற்பகல் முதல் பணிபுரியும், அவரது பணியினை வரன்முறைப்படுத்திட, அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அவர் பணியில் சேர்ந்த நாளான 14.10.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.குமரகுருபரன்
அரசுச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.
முதன்மைக் கல்வி அலுவலர், விழுப்புரம் மாவட்டம்.
தனியர் (பள்ளிக்கல்வி இயக்குநர் வழியாக)
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
01/11/23